# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*******

முறையீட்டு மனு எண்: 1110/2016/பே
ஆணை நாள்– 27–08–2018.

திரு. டி. பிரான்சிஸ்,
அக்கிவிளை வீடு,
வடக்குவீதி,
மார்த்தாண்டம்,
கன்னியாகுமரி மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்.

1.செயல் அலுவலர்,
களியக்காவிளை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.
2.உதவிப் பொறியாளர்,
களியக்காவிளை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.
3.திரு அனில்குமார்,
ஒப்பந்தக்காரர்,
கொல்லங்கோடு. --- எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், அக்கிவிளை வீடு பகுதியினைச் சேர்ந்த திரு.பிரான்சிஸ், த/பெ திரு. தாஸ், என்பவருடைய 28.10.2016ஆம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.11.2016 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண். 1110/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.பிரான்சிஸ், தனது முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2013–14ஆம் நிதியாண்டில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ரூ.45.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இதன் அடிப்படையில் இப்பணிக்கான மதிப்பீடு மற்றும் வரைபடம் ஆகியவை தயாரிக்கப்பட்டதாகவும், ஆனால் மேற்படி பணியினை முடிக்கும் போது

51,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் வரைபட அளவிற்கும், தற்போது அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தொட்டிக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளதாகவும் தெரிவித்து விசாரணைக் கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் திரு.பிரான்சிஸ், இம்முறைமன்ற நடுவத்தில் 08.12.2016 அன்று ஆஜராகி, மேற்படி முறைகேடுகளை குறிப்பிட்டு செயல்படுத்தவேண்டிய முறையில் செயல்படுத்தப்படாமல் குறைவான தொகைக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளதாகவும், எனவே அதிக மதிப்பீடு செய்து குறைவாக வேலை செய்து முறைகேட்டில் ஈடுபட்ட தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மூன்று எதிர் மனுதாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 15.12.2016ஆம் நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து களியக்காவிளை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.02.2017ம் நாளிட்ட அறிக்கை மூலம் தனது விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 26.5.2017ஆம் நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் 04.07.2017 அன்று ஆஜரான களியக்காவிளை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ஷைசத்தியதாஸ், மற்றும் உதவிப் பொறியாளர் திரு. V.ஜெயக்குமார் ஆகியோர் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தங்களுடைய விளக்கங்களை பதிவு செய்துள்ளனர்.

களியக்காவிளை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.07.2017நாளிட்ட கடிதம் மூலம் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 28.03.2013ல் அனுமதிக்கப்பட்ட தீர்மான நகல், மற்றும் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 60,000 லிட்டராக குறைத்து கட்டுவதற்கான பேரூராட்சி மன்ற தீர்மான எண்.376/31.10.2014 க்கான நகல் ஆகியவற்றினை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 11.9.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக பேரூராட்சி ஆவணங்கள் மற்றும் தல ஆய்வு மேற்கொண்டு, மேற்படி பணி உரிய விதிமுறைகளின்படியும் உரிய அனுமதியுடனும் மேற்கொள்ளப்பட்டதா. மேற்படி பணிக்கு கூடுதல் தொகை ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா, பணியின் உறுதித்தன்மை குறித்த விவரங்கள் குறித்தான விரிவான அறிக்கையினை சமர்ப்பிக்க 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a)ன் கீழ் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது கடித ந.க.எண்.5268/201/ப.4/நாள்.06.07.2018ன் மூலம் மேற்படி பணிக்கான தனது தல ஆய்வு அறிக்கையினை கீழ்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ ஆணையின்படி களியக்காவிளை பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டியது தொடர்பாக 05.07.2018ல் தல ஆய்வு மேற்கொண்டதாகவும், களியக்காவிளை தேர்வுநிலை பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) 2013–14ன் கீழ் 1,00,000 லிட்டர் கொள்ளளவு உடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பம்பு ரூம், பம்பிங் மெயின் மற்றும் விநியோகக் குழாய் அமைப்பதற்கு பேரூராட்சிமன்ற திர்மானம் 443, நாள்.17.01.2013ன்படி தீர்மானிக்கப்பட்டதாகவும் பேரூராட்சிகளின் இயக்குநரக செயற்பொறியாளர் அவர்களின் நடவடிக்கைகள்

ந.க.எண்.1010/2013/ஆ.4/நாள்.23.10.2013ன்படி 1,00,000 லிட்டர் கொள்ளளவு உடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, அதற்கான ஒப்பந்தபுள்ளி விளம்பரம் பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து செய்யப்பட்டதாகவும், களியக்காவிளை பேரூராட்சியிலிருந்து ந.க.எண்.81/2013/அ.1/நாள்.06.11.2013ன்படி ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இணையதளத்தில் இருந்து ஒப்பந்தக்காரர்கள் பதிவிறக்கம் செய்து ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளதாகவும், ஒப்பந்தம் வரவழைப்பதில் விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு குறைந்த புள்ளி ஒப்பந்ததாரரான திரு.அனில்குமார் என்பவருக்கு வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட முன்மொழியப்பட்ட பகுதி பாறைகள் நிறைந்த பகுதியாக இருந்ததால், அதனைக் கருதி உறுதியான ஒரு பாறை மீது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கான பில்லர் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டதாகவும், அப்பாறை 1,00,000 லிட்டர் கொள்ளளவு உடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான பில்லர் அமைப்பதற்கு போதுமான சுற்றளவு இல்லாத காரணத்தினால் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும், அதற்கு பேரூராட்சி மன்றத் தீர்மான எண் 1387/31.10.2014ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்வதற்கு குழித்துறை தாமிரபரணி ஆற்றங்கரையில் கிணறு அமைக்க Test Bore போடப்பட்டதாகவும், ஆனால் அப்பகுதியில் கிடைத்த தண்ணீரில் களிமண் கலந்து இருந்ததால் குடிப்பதற்கு பயன்படுத்த முடியாமலும் நீர் ஊற்று தடைபட வாய்ப்பு இருப்பதாகவும் அறியப்பட்டு, நீரோட்ட நிபுணர் கொடுத்த அறிக்கையின்படி கூடுதலான தூரத்தில் அதாவது 1 கி.மீ தூரத்தில் மாற்றம் செய்யப்பட்டு மீண்டும் Test Bore செய்து அப்பகுதியில் நல்ல தண்ணீர் கிடைத்ததால் அங்கேயே கிணறு அமைக்கப்பட்டதாகவும், எனவே பம்பிங் மெயின் 1.5 கிமீ தூரத்தில் இருந்து 2.5கிமீ தூரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் கிணற்றின் பக்கவாட்டு பகுதியில் உள்ள மணல் சரிந்து கிணற்றுக்குள் விழுந்து விடாமல் இருக்கவும், நிலத்தின் தன்மைக்கு ஏற்ற வகையிலும் கூடுதலாக கம்பி மற்றும் கான்கிரீட் 164 m2 அளவில் அமைக்கப்பட்டு 690 மீ DI பைப் மற்றும் GI பைப் மற்றும் அதற்கான உபகரணங்கள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்ட பாறையின் உயரம் தரைமட்டத்தில் இருந்து சுமார் 16 மீட்டர் இருந்ததால் உயரம் குறைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டதாகவும், ஆகவே மதிப்பீட்டில் உள்ள தொகை ரூ.14,93,101/-க்கு பதிலாக ரூ.7,01,028/- செலவினம் மட்டும் ஏற்பட்டுள்ளதாகவும், வித்தியாசத் தொகை ரூ.7,92,073/- கிணறு அமைப்பதில் ஏற்பட்ட கூடுதல் செலவினம், பம்பிங் லைன் கூடுதலாக அமைக்கவேண்டியிருந்ததாலும் திருத்திய Working Estimate போடப்பட்டுள்ளதாகவும் இதற்கு பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக நிர்வாக பொறியாளரால் அனுமதி வழங்கப்பட்டு பணி முடிவு அறிக்கையும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் விவரப்படியான வேலைக்கு பட்டியல் தொகை ரூ.45,00,000/- அனுமதிக்கப்பட்டு அதில் சட்டபூர்வ பிடித்தங்கள் போக ஒப்பந்தக்காரருக்கு 17.06.2015ல் ரூ.25.00 லட்சம் மற்றும் 27.10.2015ல் ரூ.10.00 லட்சம் மற்றும் 04.03.2016ல் ரூ. 5.05 லட்சம் என மொத்தம் ரூ.40.05 லட்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இப்பணிக்கு 17.05.2015ல் State Quality

Monitor என்பவர் அறிக்கை செய்துள்ளதாகவும், Department of Industries and Commerce Regional Testing Laboratory சோதனைச் சான்று 13.01.2014ல் பெறப்பட்டும், மேற்படி பணி பேரூராட்சிகளின் உதவிப் பொறியாளர் மேற்பார்வையில் உதவி செயற்பொறியாளரால் மேலாய்வு செய்யப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, பொதுமக்களின்பயன்பாட்டில் உள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, களியக்காவிளை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம், மற்றும் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வறிக்கை ஆகியவை மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நகரப்புற வளர்ச்சி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை பேரூராட்சியில் ரூ.45.00 லட்சம் மதிப்பீட்டில் ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தெரிவு செய்யப்பட்ட இடம் பாறைப் பகுதியாக இருந்ததால் உறுதியான பாறையினை தேர்ந்தெடுத்து அதன் மீது ஒரு லட்சம் கொள்ளளவு உடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான பில்லர் அமைப்பதற்கு போதுமான சுற்றளவு இல்லாத காரணத்தினால் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க தீர்மானிக்கப்பட்டதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்ட பாறையின் உயரம் தரைமட்டத்தில் இருந்து 16 மீட்டர் உயரம் இருந்ததால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உயரம் குறைத்து அமைக்கப்பட்டதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ரூ.14,93,101/– மதிப்பிட்டிருந்ததில் ரூ.7,01,028/– மட்டும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு எஞ்சிய தொகை கிணறு அமைத்தும் பம்பிங் லைன் அமைக்கவும் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இதற்கு பேரூராட்சிகளின் இயக்குநரக நிர்வாக பொறியாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனவும், இப்பணிக்கான முடிவு அறிக்கையும் மேற்படி நிர்வாக பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ஒரு லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு பதில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி அமைத்ததற்கு பேரூராட்சி மன்ற தீர்மான எண்.1387/31.10.2014ன் மூலம் பெறப்பட்டுள்ளது. செய்து முடிக்கப்பட்டுள்ள இப்பணியினை மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு அலுவலர் ஆய்வு மேற்கொண்டு அதற்கான சான்றினை 17.05.2015ல் அளித்துள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்து, அதற்கான நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளதும் பரிசீலிக்கப்பட்டது. மேலும் இப்பணிக்கான சோதனைச் சான்றும் Department of Industries and Commerce Regional Testing Laboratory நிறுவனம் மூலம் 13.01.2014ல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு மேற்படி சான்றின் நகலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நேர்வில் மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கொள்ளளவு 60,000 லிட்டராக மாற்றி அமைக்கப்பட்ட வகையில் முறைகேடு என்பதை நிரூபிக்கும் வகையில் போதுமான ஆதாரங்களை முறையீட்டு மனுதாரர் சமர்ப்பிக்காத நிலையில், அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட ஆய்வறிக்கையில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டது போன்று

முறைகேடு ஏதும் நடைபெறவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில், இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையினை கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27 –ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

31/8/2018

செயலாளர்.

29/8/18

பெறுநர்

1. திரு. டி. பிரான்சிஸ்,
அக்கிவிளை வீடு,
வடக்குவீதி,
மார்த்தாண்டம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்.

3. செயல் அலுவலர்,
களிக்காவிளை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.